சுருக்கம்

வேளாண்மைத் துறை – வேளாண்மைப் பொறியியல் – வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் கருவிகளை இயக்கவும், பராமரிக்கவும், பயிற்சியளிக்கவும் ரூ. 42.90 இலட்சம் 2012-13-ம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண்.16 நாள்: 27.01.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044
தை திங்கள் 14 ம் நாள்

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.157, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள்:16.9.2011.
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடித எண்.வே.இ1/23761/2012, நாள்:18.6.2012.

------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க 2011–12–ம் நிதியாண்டில் 300 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும், 6 வேளாண்மை பொறியியல் பணிமனைகளில் 6 மாத கால பயிற்சி வழங்கவும் ரூ.42.90 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தனது செயற்குறிப்பில், 2011–12–ம் நிதியாண்டில் 234 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் 6 வேளாண்மை பொறியியல் துறை பணிமனைகளில் 6 மாத கால பயிற்சி ரூ.31.98 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும், மேலும் தமிழ்நாட்டில் வேளாண்மை இயந்திரமயமாக்கலை பிரபலப்படுத்தும் பொருட்டு வேளாண்மை பொறியியல் துறை மூலமாக புதிய மேம்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்கள் பெருமளவில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது என்றும் ஆயினும், விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் போதிய அனுபவமின்மையால் விளை நிலங்களில் வேளாண் இயந்திரங்களை அதிக அளவில் ஈடுபடுத்த தயங்குகின்றனரென்றும், இப்பிரச்சனைகளைத் தீர்க்க, கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை இயந்திரங்களை

இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சி அளிப்பது அவசியமாகிறதென்றும் இதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, பயிற்சிக்குப்பின் அவர்களது சொந்த கிராமத்தில் பணிமனை தொடங்க ஊக்குவிப்பது அவசியமாகிறதென்றும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக கடந்த ஆண்டு பயிற்சித் திட்டத்தில், கீழ்க்கண்ட இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களால் 12.06.2012–ல் நடைபெற்ற தனது ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

1) பயிற்சிக்காலம் 6 மாதமாக இருப்பதால் பயிற்சியாளர்கள் தொடர்ச்சியாக வருகை தருவதில்லை.

2) பயிற்சியாளர்கள் அதிக அளவில் (50 நபர்கள்) இருப்பதால் அனைவருக்கும் போதிய பயிற்சி அளிப்பதில் சிரமம் உள்ளது.

3) அதிக அளவு பயிற்சியாளர்களை ஒருமுகப்படுத்துவதில் சிரமம் உள்ளது.

4) 50 பயிற்சியாளர்களுக்கும் ஒரே நேரத்தில் செய்முறை வகுப்பு நடத்துவதில் சிரமம் உள்ளது.

5) குறுகிய கால பயிற்சியாக இருந்தால் ஒழுங்கு முறையாக வகுப்புகளை நடத்த ஏதுவாக இருக்கும்.

மேலும் மேற்கூறிய காரணங்களால், 300 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பது குறித்து 6 வேளாண்மை பொறியியல் துறை பணிமனைகளில் 6 மாதங்களுக்கு ஒரு பயிற்சிக்கு ரூ.7.15 இலட்சம் செலவில் கீழ்வருமாறு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

I குழு — 150 பயிற்சியளார்கள்
(25 பயிற்சியாளர்கள் வீதம் 6 பணிமனைகளில் 3 மாதங்களுக்கு)

II குழு — 150 பயிற்சியளார்கள்
(25 பயிற்சியாளர்கள் வீதம் 6 பணிமனைகளில் 3 மாதங்களுக்கு)

மேலும், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள், 2012–13–ஆம் ஆண்டிற்கான மேற்கூறிய பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக 300 பயிற்சியாளர்களுக்கு ஆறு வேளாண்மைத்துறை பணிமனைகளில் ஆறு மாதங்களுக்கு மொத்த செலவுத் தொகையான ரூ.42.90 இலட்சங்களை கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கிட அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:–

2012 – 13 ம் ஆண்டிற்கான கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | பயிற்சி அளிக்கும் இடம் | ஒரு குழுவிற்கு பயிற்சியாளர்கள் எண்ணிக்கை | ஒரு குழு–விற்கான செலவுத் தொகை | இரு குழுவிற்கு பயிற்சியாளர்கள் எண்ணிக்கை | இருகுழு–விற்கான மொத்த செலவுத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | அரசு இயந்திர கலப்பை பணிமனை, கோயம்புத்தூர் | 25 | 3.575 | 50 | 7.150 |
| 2 | மதுரை | அரசு இயந்திர கலப்பை பணிமனை, மதுரை | 25 | 3.575 | 50 | 7.150 |
| 3 | வேலூர் | அரசு இயந்திர கலப்பை பணிமனை, வேலூர். | 25 | 3.575 | 50 | 7.150 |
| 4 | திருச்சி | அரசு இயந்திர கலப்பை பணிமனை, திருச்சி | 25 | 3.575 | 50 | 7.150 |
| 5 | திருவாரூர் | வேளாண் கருவிகள் பணிமனை, திருவாரூர் | 25 | 3.575 | 50 | 7.150 |
| 6 | திருநெல்வேலி | அரசு இயந்திர கலப்பை பணிமனை, திருநெல்வேலி | 25 | 3.575 | 50 | 7.150 |
| | மொத்தம் | | **150** | **21.45** | **300** | **42.900** |

மேலும் பயிற்சி அளிப்பவர்களுக்கு மதிப்பூதியம் மற்றும் பிற செலவினங்கள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட உதவிசெயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)களுக்கு முன்பணமாக சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலக / கருவூலத்தில் எடுத்து செலவு மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கிடுமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 300 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்களை இயக்குவது மற்றும் பராமரிப்பது குறித்த பயிற்சியினை கோயமுத்தூர், மதுரை, வேலூர், திருச்சி, திருவாரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை பணிமனைகளில் I குழு 150

பயிற்சியளார்கள் (25 பயிற்சியாளர்கள் வீதம் 6 பணிமனைகளில் 3 மாதங்களுக்கும்) II குழு 150 பயிற்சியளார்கள் (25 பயிற்சியாளர்கள் வீதம் 6 பணிமனைகளில் 3 மாதங்களுக்கும்) ஆக மொத்தம் ஆறு மாதங்களுக்கு 50 பயிற்சியாளர்கள் கொண்ட ஒரு பயிற்சிக்கான செலவு ரூ.7.15 இலட்சம் வீதம் மேற்கூறிய ஆறு மாவட்டங்களுக்கான மொத்தச் செலவினம் ரூ.42.90 இலட்சத்தினை (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) இணைப்பு 1, 2 மற்றும் 3–ல் கண்டுள்ளவாறு பயிற்சி மேற்கொள்ள 2012-2013–ம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கியும், மேலும் பயிற்சி அளிப்பவர்களுக்கு மதிப்பூதியம் மற்றும் பிற செலவினங்கள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)களுக்கு முன்பணமாக சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலகம் / கருவூலத்தில் எடுத்து செலவு மேற்கொள்ள அனுமதியும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும்.

"2401–00–பயிர் வளர்ப்பு -113-வேளாண்மைப் பொறியியல்-பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்-II மாநிலத் திட்டம் -JI- டிராக்டர் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் திட்டம் -72-பயிற்சி".
(கு.தொ.கு.2401–00–113–JI–7206)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

6. மேற்படி பயிற்சி குறித்த மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அ.சா.கு.எண்.337 /DS(SR)/ வேளாண்மை/ 2012, நாள்:19.11.2012ல் பெற்று வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை –35.
உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), கோயமுத்தூர்,
மதுரை,வேலூர், திருச்சி, திருவாரூர், திருநெல்வேலி வழி
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்),சென்னை –35.
தலைமை மாநிலக் கணக்காயர், சென்னை –18.
தலைமை மாநிலக் கணக்காயர், சென்னை –18.(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் , மதுரை.

கருவூல அலுவலர், கோயமுத்தூர், வேலூர், திருச்சி, திருவாரூர், திருநெல்வேலி.
ஆணையர், கருவூல கணக்கு அலுவலகம்,சென்னை –15.

<u>நகல்</u>

நிதி (வேளாண்மை / வ.செ.I) துறை, சென்னை – 9.
சிறப்பு நேர்முக உதவியாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், வேளாண்மைத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தனிச்செயலர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு ~~முதன்மைச்~~ செயலர் அலுவலகம், சென்னை–9.
உதிரி/ இருப்புக்கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

27/1/2013
பிரிவு அலுவலர்.

27/1/2013.

அரசாணை (நிலை) எண்.16, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 27.01.2013

**இணைப்பு - I**

| வ.எண். | பயிற்சி விவரம் | நாட்கள் |
|---|---|---|
| 1 | விவசாய நிலங்களில் வேளாண் கருவிகளின் முக்கியத்துவம் | 3 |
| 2 | விசை கலப்பை (Power Tiller) | 3 |
| 3 | சுழற் கலப்பை (Rotavator) | 2 |
| 4 | உழுவை (Tractor) | 5 |
| 5 | தெளிப்பான் (Sprayer) | 3 |
| 6 | பல்வகை தானியங்கள் கதிரடிக்கும் கருவி (Multicrop Thresher) | 3 |
| 7 | மனிதரால் பயன்படுத்தும் தோழமை கருவிகள் (Gender Friendly equipments) | 2 |
| 8 | தோட்டக்கலை பயிர்களுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் (Horticultural machinery/implements) | 3 |
| 9 | நெல் நாற்று தட்டு தயாரிக்கும் இயந்திரம் (Rice Tray nursery preparation machine(Automatic) | 2 |
| 10 | நெல் நடவு இயந்திரம் (Paddy transplanters) | 5 |
| 11 | லேசர் மூலம் நிலம் சமன் செய்யும் கருவி (Laser Land Leveller) | 6 |
| 12 | கரும்பு பயிர் சாகுபடிக்கான கருவிகள் (Sugarcane Machinery) | 6 |
| 13 | உழுவை மூலம் இயக்கக் கூடிய இலை துகளாக்கும் கருவி (Tractor PTO operated leaf shreder) | 3 |
| 14 | விசை களை எடுக்கும் கருவி (Power Weeders (4 wheel and 2 wheel) | 2 |
| 15 | நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester) | 3 |
| 16 | நுண்ணீர் பாசனம் | 5 |
| 17 | மின் மோட்டார் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 5 |
| 18 | ஆழ்துளை கிணறுகளில் நீர் மூழ்கி பம்ப் நிறுவுதல் | 5 |
| | மொத்தம் | 66 |

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

/ உண்மை நகல் /

27/1/2013

பிரிவு அலுவலர்

27/1/2013

அரசாணை (நிலை) எண்.16, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 27.01.2013

## இணைப்பு–II

2012 – 13 ம் ஆண்டிற்கான கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கான தோராய செலவு மதிப்பீடு

(3 மாதங்களுக்கு 25 பயிற்சியாளர்கள் கொண்ட ஒரு பயிற்சிக்கான செலவு)

| வ. எண். | விவரம் | பயிற்சியாளர்கள் எண்ணிக்கை | செலவு வீதம் ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பயிற்சி உதவித் தொகை (25X22X3X100) | 25 | ரூ.100 வீதம் ஒரு நாளுக்கு ஒரு பயிற்சியாளருக்கு | 165000 |
| 2 | பயிற்சியாளருக்கு வழங்கப்படும் மதிய உணவு, தேநீர் மற்றும் சிற்றுண்டி (80X25X22X3) | 25 | ரூ.80 வீதம் ஒரு நாளுக்கு ஒரு பயிற்சியாளருக்கு | 132000 |
| 3 | பயணச் செலவு (பயிற்சியாளர்கள் உள்ளூர் பகுதிகளில் பயிற்சியின் பொருட்டு செல்லும் போக்குவரத்துக்கு ஏற்படும் செலவு அல்லது ரூ.300க்கு மிகாமல் எது குறைவோ அந்த தொகை) (300x25) | 25 | மொத்த தொகை | 7500 |
| 4 | பயிற்சியாளருக்கான கலப்பெட்டி (2120X25) | 25 | மொத்த தொகை | 53000 |
| | மொத்தம் | | | **357500** |

குறிப்பு : 1. பங்கு பெறும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை மற்றும் கலந்து கொள்ளும் நாட்களை சார்ந்து உதவித் தொகை வழங்கப்படும்.

2. ஒரு பயிற்சிக் குழுவிற்கு மொத்தச் செலவினம் **ரூ.3,57,500/-**

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

/ உண்மை நகல் /

27/1/2013
பிரிவு அலுவலர்

27/1/2013.

அரசாணை (நிலை) எண்.16, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 27.01.2013

## இணைப்பு -III

2012 – 13 ம் ஆண்டிற்கான கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம்

| வ. எண். | மாவட்டம் | பயிற்சி அளிக்கும் இடம் | ஒரு குழுவிற்கு பயிற்சி–யாளர்கள் எண்–ணிக்கை | ஒரு குழு–விற்கான செலவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | இரு குழுவிற்கு பயிற்சி–யாளர்கள் எண்–ணிக்கை | இரு குழுவிற்கான மொத்த செலவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோயம்–புத்தூர் | அரசு இயந்திர கலப்பை பணிமனை, கோயம்புத்தூர் | 25 | 3.575 | 50 | 7.150 |
| 2 | மதுரை | அரசு இயந்திர கலப்பை பணிமனை, மதுரை | 25 | 3.575 | 50 | 7.150 |
| 3 | வேலூர் | அரசு இயந்திர கலப்பை பணிமனை, வேலூர். | 25 | 3.575 | 50 | 7.150 |
| 4 | திருச்சி | அரசு இயந்திர கலப்பை பணிமனை, திருச்சி | 25 | 3.575 | 50 | 7.150 |
| 5 | திருவாரூர் | வேளாண் கருவிகள் பணிமனை, திருவாரூர் | 25 | 3.575 | 50 | 7.150 |
| 6 | திருநெல்–வேலி | அரசு இயந்திர கலப்பை பணிமனை, திருநெல்வேலி. | 25 | 3.575 | 50 | 7.150 |
| | **மொத்தம்** | | **150** | **21.45** | **300** | **42.900** |

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

/ உண்மை நகல் /

27/1/2013
பிரிவு அலுவலர்
27/1/2013